543

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

கல்விமாணி (சிறப்பு) ஆரம்பக்கல்வி நிகழ்ச்சித்திட்டம் - 2022/2023

இறுதிப்பரீட்சை – 2022/2023

மட்டம் - 03

**EPU3235– கலைத்திட்டமும் செய்கையும் - சுற்றாடல் சார்ந்த செயற்பாடும்**

காலம்: இரண்டு (02) மணித்தியாலங்கள்

திகதி:- 10.02.2024 நேரம்: பி.ப. 01.30 - பி.ப 03.30

பகுதி **I** இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி **II** இல் ஏதேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடை தருக.

## பகுதி I

1. "சுற்றாடல்" என்னும் பதத்தினை உமது சொந்த மொழிநடையில் வரையறுக்க.
2. முன்பிள்ளைப் பருவத்தில் பிள்ளைகள் சுற்றாடலையும் அதன் விருத்தியையும் இனங்காணும் வழிமுறைகளை சுருக்கமாக விளக்குக.
3. "தொடர்பாடல்" என்னும் பதத்தினை விளக்குக.
4. "சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் என்னும் பாடமானது இலங்கையில் ஆரம்பப்பிரிவில் முக்கியமான பாடமாக விளங்குகிறது" நீங்கள் இக்கூற்றினை ஏற்றுக்கொள்கிறீரா? உமது விடையை நியாயப்படுத்துக.
5. சுற்றாடலைப் பாதுகாப்பதில் மாணவரது வகிபங்கு யாது? இதற்கு மாணவர்கள் எவ்வாறு பங்களிக்க முடியும்?
6. பூகோள சுற்றாடல் எழுவினாக்களை (பிரச்சினைகள்) பட்டியலிட்டு அவற்றில் நான்கினைச் (04) சுருக்கமாக விளக்குக.
7. "சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் என்னும் பாடமானது ஒன்றிணைந்த இயல்புகளை கொண்டுள்ளது" அவற்றினை விளக்குக.
8. எமது நாளாந்த செயற்பாடுகளுடன் தொடர்பாடல் எவ்வாறு சம்பந்தப்படுகின்றது?

**(5X8=40 புள்ளிகள்)**

## பகுதி II

9. **(i)** பின்வரும் பதங்களை விளக்குக.

   (அ) பௌதிகச் சுற்றாடல்

   (ஆ) உயிரியல் சுற்றாடல் **(04 புள்ளிகள்)**

   **(ii)** சுற்றுச் சூழலில் உள்ள உயிருள்ளனவற்றுக்கும், உயிரற்றனவற்றிற்கும் இடையிலான தொடர்பு யாது? **(04 புள்ளிகள்)**

   **(iii)** ஆரம்பப் பாடசாலை ஆசிரியர் என்ற வகையில் சுற்றாடல் பாதுகாப்பிற்கு எவ்வாறு பங்களிப்பீர்? **(12 புள்ளிகள்)**

10. **(i)** இலங்கையின் ஆரம்பப் பாடசாலைகளில் சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் என்ற பாடத்தின் வளர்ச்சிப் போக்கினை வரலாற்று ரீதியாக விளக்குக.

**(06 புள்ளிகள்)**

**(ii)** "சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் என்னும் பாடமானது ஏனைய பாடங்களில் இருந்து வேறுபடுகின்றது" நீங்கள் இக்கூற்றுடன் உடன்படுகின்றீர்களா? உமது விடையை நியாயப்படுத்துக.

**(06 புள்ளிகள்)**

**(iii)** சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் என்ற பாடத்தில் உள்ள கருப்பொருள் ஏதாவதொன்றினை தெரிவு செய்து, அக்கருப்பொருளில் இருந்து விருத்தி செய்யக் கூடிய பாடப்பரப்புக்களை விபரிக்குக.

**(08 புள்ளிகள்)**

11. **(i)** தொடர்பாடல் செயலொழுங்கின் அடிப்படை தொழிற்பாடுகள் எவை? **(04 புள்ளிகள்)**

**(ii)** கல்வித் தொழில்நுட்பத்திற்கும் சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் என்ற பாடத்திற்கும் இடையிலான தொடர்பை விளக்குக.

**(06 புள்ளிகள்)**

**(iii)** தொடர்பாடலை விருத்தி செய்யப் பொருத்தமான செயற்பாடொன்றை பிரேரிக்க. நீங்கள் பிரேரித்த செயற்பாட்டினை விளக்குக.

**(10 புள்ளிகள்)**

12. "ஆரம்ப நிலைக் கற்பித்தல் - கற்றல் செய்முறையில் கணிப்பீடு, மதிப்பீடு என்பன முக்கிய வகிபாங்கினை ஆற்றுகின்றன. விசேடமாக சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் என்ற பாடத்தில் இவை மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றன."

**(i)** நான்கு (04) முக்கிய உண்மைகளுடன் சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் பாடத்தில் கணிப்பீடு, மதிப்பீடு என்பவற்றின் முக்கியத்துவத்தினை சுருக்கமாக விளக்குக.

**(08 புள்ளிகள்)**

**(ii)** சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் என்ற பாடத்திற்கு பொருத்தமான நான்கு (04) கணிப்பீட்டு, மதிப்பீட்டு முறைகளை பட்டியலிட்டு அவற்றினை பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக.

**(12 புள்ளிகள்)**

13. "எமது நாளாந்த வாழ்வில் மேற்கொள்ளும் சிறிய மாற்றங்கள் சில பூகோள வெப்பமடைதல், திண்மக்கழிவு அகற்றல், சக்திப் பிரச்சினை நிலம் மாசடைதல் போன்ற பூகோளப் பிரச்சினைகளை தீர்க்க உதவும்."

**(i)** பூகோளத்தைப் பாதுகாக்க நீங்கள் மேற்கொள்ளக்கூடிய ஐந்து (05) சிறிய மாற்றங்களை விளக்குக.

**(10 புள்ளிகள்)**

**(ii)** "கணிப்பீடானது மாணவர்களின் வேலையை சரி, பிழையென அடையாளப்படுத்தி தரங்களை தருவது மட்டுமல்ல வகுப்பறைகளில் சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகளை கணிப்பீடு செய்யும் போது என்ன செய்ய வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது."

சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகளில் கணிப்பீடு செய்தலில் மாணவரை ஒருவரோடு ஒருவர் ஒப்பிடுவதன் தீய விளைவுகளில் நான்கினை (04) எழுதுக. **(10 புள்ளிகள்)**

*-முழுப்பதிப்புரிமை பெற்றது -*